In the Court of the Principal District & Sessions Judge, Thoothukudi

Case No : Spl.C.36/2026

Deposition of DW.4

****

Name திரு.வீராசாமி

Father's Name

Village

Taluk

Calling

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 20th day of July 2026.

Accused present.

**சாட்சி எதிரி தரப்பில் விசாரிக்க மனு செய்து மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில் விசாரணை.**

**முதல் விசாரணை :**

எதிரி கோரியுள்ள ஆவணங்களை நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேனா என்றால் 10.12.2006 மற்றும் 11.12.2006 இரண்டுக்கு மட்டும் தான் ஆவணங்கள் உள்ளது. அந்த மாதம் முழுவதுமாக கேட்டுள்ள ஆவணம் இல்லை. துறைரீதியாக விசாரணை மற்றும் நீதிமன்ற விசாரணை நடக்கும் போது ஆவணங்களை பாதுகாத்து வைக்கவேண்டும் என்றால் சரிதான். நான் கோரிய நாட்குறிப்பு 10.12.2006 மற்றும் 11.12.2006 க்கான இரண்டு ஆவணங்களும் எ.சா.ஆ.33 ஆகும் (நகல்). 01.12.2006 முதல் 31.12.2006 வரையான ஆவணங்களை டிஎஸ் பி அலுவலகத்தில் தேடியிருந்தால் கிடைத்திருக்கும் என்றால் அங்கே கேட்டதற்கு அழித்து விட்டதாக தெரிவித்தார்கள். எனக்கு நீதி கிடைக்க கூடாது என்பதற்காக வேண்டுமென்றே ஆவணங்கள் அழிக்கப்பட்டது என்றால் இல்லை.

**குறுக்குவிசாரணை : (அரசு தரப்பில்)**

நான் தற்போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்த எ.சா.ஆ.33 ஆவணமானது ஸ்ரீவைகுண்டம் காவல் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்திலோ, தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலோ அசல் இல்லை என்றால் ஆமாம்.

S SUBA DEVI

Digitally signed by S SUBA DEVI
Date: 2026.07.20 16:49:29 +0530

இந்த ஆவணங்கள் எப்போது அழிக்கப்பட்டது என்றால் 2013 ல் வாய்மொழி உத்தரவின் பேரில் அழிக்கப்பட்டதாக 2019 ல் இருந்த ஆய்வாளர் பத்மகுமாரி PR Enquiry ல் தெரிவித்ததாக எனக்கு தெரிய வந்தது. இந்த ஆவணம் எவ்வாறு எனக்கு கிடைத்தது என்றால் PR Section ல் இருந்து கிடைக்கப்பெற்றது. இந்த ஆவணம் யாரிடம் இருந்து யாருக்கு பெறப்பட்டது என்ற விபரங்கள் உள்ளதா என்றால் இல்லை. எதிரி மீது துறைரீதியாக விசாரணையின் போது பத்மபிரியா எதிரியின் சாட்சி இந்த ஆவணத்தை கொடுத்ததாகவும், அதிலிருந்து என்னால் எடுத்து வரப்பட்டது என்றால் ஆமாம். இந்த ஆவணத்தின் உண்மைத் தன்மை பற்றி என்னால் சொல்ல முடியுமா என்றால் Received Seal இருக்கும். ஆழ்வார்திருநகரி காவல் நிலையத்தில் டிசம்பர் 2006 க்கான தினசரி நாட்குறிப்பு உள்ளதா என்றால் இல்லை.

**<u>மறுவிசாரணை :</u>**

**இல்லை.**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் எதிரி/எதிரிகள் தரப்பு முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/கைரேகை செய்யப்பட்டது.

S SUBA DEVI

Digitally signed by S SUBA DEVI
Date: 2026.07.20 16:49:35 +0530

**முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தூத்துக்குடி.**